# வலயக்கல்வி அலுவலகம் - வலிகாமம்

**தரம் 6**

## மூன்றாம் தவணைப் பரீட்சை - 2019

### கணிதம்


பெயர் -  நேரம் - 2 மணித்தியாலம்

### பகுதி - I

**** எல்லா வினாக்களுக்கும் இத்தாளிலேயே விடையளிக்க.***

**1.** 64355 எனும் எண்ணை நியம வடிவில் எழுதுக.

**2.** அருகே காட்டப்பட்டுள்ள வட்டத்தில்



1. வட்டத்தின் உள்ளே "X" எனக் குறிக்க.
2. வட்டத்தின் மீது "•" எனக் குறிக்க.

**3.** 27 இன் காரணிகளைக் காண்க.

Education கல்வி

**4.** 745cm இனை மீற்றர், சென்ரி மீற்றரில் தருக.

**5.** $2^3 \times 3^2$ பெறுமானங் காண்க.

**6.** ஏறுவரிசைப்படுத்துக.

1, 0.1, 1.1, 1.11, 11.1


**7.** பழப்பாகு தயாரிப்பதற்காக பழச்சாறு 750 ml உம், நீர் 2l 500ml உம் கலக்கப்படுகின்றது. தயாரிக்கப்பட்ட பானத்தின் அளவை லீற்றரில் தருக.

**8.** 1 இல் இருந்து 50 வரையான சதுர எண்களை எழுதுக?




kalvi.lk

**9.** கீழே காட்டப்பட்டுள்ள எண்கோட்டின் மீது 5, -3, -1 என்பவற்றைக் குறிக்க. இவ்வெண்களை ஏறுவரிசையில் எழுதுக.




**10.** 75cm, 1m 25cm களுக்கு இடையிலான விகிதத்தை எளிய வடிவில் எழுதுக.

**11.** அருகில் காட்டப்பட்டுள்ள உருவின் சுற்றளவைக் காண்க.




**12.** தரம் 6 இல் உள்ள மாணவர்கள் கணித பாடத்தில் பெற்றுக் கொண்டுள்ள புள்ளிகள் கீழே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளன. அவற்றினைக் கிட்டிய பத்தின் மடங்கிற்கு மட்டந்தட்டி அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| மாணவர் பெயர் | உண்மைப் புள்ளி | கிட்டிய பத்தின் மடங்கிற்கு மட்டந்தட்டப்பட்ட புள்ளி |
|---|---|---|
| குகன் | 96 | |
| ஆனந்தி | 56 | |
| அன்ரனி | 85 | |
| குமார் | 72 | |

**13.** 1, 3. 6, 10, ............, ............ எனும் எண்கோலத்தில் அடுத்து வரும் இரண்டு எண்களை எழுதுக.


**14.** a = 8 ஆகும் போது 20 - a எனும் அட்சர கணிதக் கோவையின் பெறுமானம் யாது?

**15.** மோட்டார் வண்டி ஒன்று 1$l$ எரிபொருளில் 12 km தூரம் செல்லும் எனின் 72 km செல்வதற்குத் தேவையான எரிபொருளின் அளவு யாது?



kalvi.lk

**16.** கீழே தரப்பட்டுள்ள எண்களை யாதேனும் ஒரு பொதுப் பண்புக்கு ஏற்ப இரண்டு கட்டங்களாக வேறாக்கி எழுதுக. நீர் வேறாக்க பயன்படுத்திய பொதுப்பண்பு எது எனவும் குறிப்பிடுக.





பொதுப்பண்பு .......................................... ..........................................

**17.** >,< ஆகிய குறியீடுகளைப் பயன்படுத்தி வெற்றுக் கட்டத்தினைப் பூரணப்படுத்துக.

-6 ☐ -2      0 ☐ -3

**18.** கீழே தரப்பட்டுள்ள உருவில் நிழற்றிய பகுதியினை முழுவதின் பின்னமாகத் தருக.




**19.**  என்பதனால் குறிக்கப்படும் எண் யாது?

**20.** மான் ஒன்று இரை தேடுவதற்காக காட்டில் A என்ற இடத்தில் இருந்து ஆரம்பித்து அம்புக்குறி வழியே சென்று மீண்டும் A யை அடைந்தது. நீங்கள் A யில் இருந்து மானை அவதானித்தால் பின்வரும் ஒவ்வோர் இடத்தினதும் திசைகளை எழுதுக.

D -

G -




(20 x 2 = 40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

## பகுதி - II

**எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.**

**01)** " நாம் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை வெற்றிகரமாக நிறைவு செய்து கொள்வதற்கு கணிதச் செய்கைகள் பற்றி அறிந்திருத்தல் அவசியமாகும்"

(a) பின்வருவனவற்றைச் சுருக்குக.

(i)
$$\begin{array}{r} 34 \\ +\ 25 \\ \hline \\ \hline \end{array}$$

(ii) *93 + 249 =* ☐

(iii)
$$\begin{array}{r} 342 \\ -\ 19 \\ \hline \\ \hline \end{array}$$

(iv) *703 - 419 =* ☐

*(4 புள்ளிகள்)*

(b) பொருத்தமான எண்களைக் கொண்டு இடைவெளி நிரப்புக.

| X | 2 | 3 | 5 | 9 |
|---|---|---|---|---|
| 2 | 4 | 6 | .......... | 18 |
| 4 | 8 | .......... | 20 | 36 |
| 6 | .......... | 18 | 30 | .......... |

*(4 புள்ளிகள்)*

(c) சுருக்குக. *336 ÷ 14*

*(2 புள்ளிகள்)*

(d) பண்ணை ஒன்றில் மிருகங்களுக்கு நாளொன்றுக்கு 50 kg கொண்ட 15 மிருக உணவுப் பொதிகள் தேவைப்படுகின்றன. களஞ்சியத்தில் மிருக உணவுப் பொதிகள் 480 உள்ளன எனின்,

1. களஞ்சியத்தில் உள்ள உணவு எத்தனை நாட்களுக்குப் போதுமானது?

2. பண்ணையில் 75 மிருகங்கள் இருந்தால் சம அளவு உணவு எல்லா மிருகங்களுக்கும் தேவைப்படின் மிருகமொன்றிற்கு ஒரு நாளைக்கு தேவைப்படும் உணவின் அளவினை kg ல் தருக.

*(2 புள்ளிகள்)*



kalvi.lk

**02)** *"ஒன்றிலும் குறைந்த 0 இலும் கூடிய பின்னங்கள் முறைமைப் பின்னங்கள் எனப்படும்".*

a. *பின்வரும் பின்னங்களை முறைமைப் பின்னங்கள் முறைமையற்ற பின்னங்கள் என வேறுபடுத்தி எழுதுக.*

$\frac{1}{2}$ , $\frac{5}{4}$ , $\frac{3}{4}$ , $2$

| முறைமை பின்னங்கள் | முறைமையற்ற பின்னங்கள் |
|---|---|
| | |

(b) $\frac{6}{8}$ இற்கு இரண்டு சமவலுப் பின்னங்கள் எழுதுக.

(c) சுருக்குக.


(i) $\frac{3}{5} + \frac{1}{5}$ (ii) $\frac{7}{10} - \frac{2}{5}$

(d)

1. $\frac{36}{100}$ எனும் பின்னத்தை தசம எண்ணாக மாற்றுவதற்கான பின்வரும் படிமுறையின் இடைவெளிகளை நிரப்புக.

$$\frac{36}{100} = \frac{\square}{100} + \frac{6}{100} = \frac{3}{\square} + \frac{6}{100} = 0.3 + \square$$

2. 11.11 என்பதனை எண்சட்டத்தில் குறித்துக் காட்டுக.



[2 + 2 + (2+ 2) + (2 + 2)] புள்ளிகள்

**03)** a. குமரன் தனது வீட்டில் இருந்து பி.ப 3.00 மணிக்கு புறப்பட்டு 25 நிமிடங்களில் பேரூந்து தரிப்பிடத்தை அடைந்தான்.

1. குமரன் வீட்டில் இருந்து புறப்பட்ட நேரத்தை சர்வதேச நியம முறைப்படி எழுதுக.

2. பேரூந்து தரிப்பிடத்தை அடைந்த நேரம் யாது?



kalvi.lk

3. அவன் பேருந்தில் செல்வதற்கு மேலும் t நிமிடங்கள் காத்திருக்க வேண்டி இருந்தது. அவர் வீட்டில் இருந்து புறப்பட்டு பேருந்து செல்வதற்கு எடுத்த மொத்த நேரத்தினை அட்சர கணித கோவையாக எழுதுக.

b. விமான பயணத்தின் போது பயணி ஒருவருக்கு கட்டணமின்றி 40kg நிறைகளைக் கொண்ட பொருட்களை எடுத்துச் செல்வதற்கு அனுமதி வழங்கப்படும். அவர் மேலதிகமாகக் கொண்டு செல்லும் ஒவ்வொரு கிலோ கிராமிற்கும் ரூ 700.00 வீதம் செலுத்த வேண்டும். பயணி ஒருவர் 17kg 300g, 13kg 700g திணிவுகளைக் கொண்ட இரு பயணப் பொதிகளை வைத்துள்ளார்.


1. அவர் இன்னும் கட்டணமின்றி எடுத்துச் செல்லக்கூடிய திணிவு யாது?


2. அவர் 14kg திணிவுடைய மேலும் ஒரு பொதியைக் கொண்டு செல்ல வேண்டி இருப்பின் மேலதிகமாகச் செலுத்த வேண்டிய கட்டணம் யாது?


[(2 + 2 + 2+) + (4 + 2)] புள்ளிகள்


04) "நேர்கோட்டுத் துண்டங்களை மட்டும் கொண்ட மூடிய தளவுருக்கள் நேர்கோட்டுத் தளவுருக்கள் எனப்படும்."


a. பின்வரும் உருக்களில் இருந்து நேர்கோட்டுத் தளவுருக்களைத் தெரிவு செய்து அவற்றுக்கான உரோமன் இலக்கங்களை கீழ் உள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.


(i)


(ii)


(iii)


(iv)


(v)


(vi)


நேர்கோட்டு தளவுருக்கள் = (                    )

(2 புள்ளிகள்)

b. செவ்வகம் ஒன்றின் பண்புகள் 2 தருக.

(2 புள்ளிகள்)


Education கல்வி அதியாபன



kalvi.lk

c. கீழே கொடுக்கப்பட்டுள்ள சதுரத்தாளில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள கோணங்கள் ஒவ்வொன்றையும் வரைந்து அவற்றிற்குரிய இலக்கங்களை இடுக.


1. செங்கோணம்
2. விரிகோணம்
3. கூர்ங்கோணம்
4. பின்வளை கோணம்



(4 புள்ளிகள்)

d. திண்மம் ஒன்றைத் தயாரிப்பதற்கான வலையுரு ஒன்று அருகில் தரப்பட்டுள்ளது.

1. தயாரிக்கப்படும் திண்மத்தின் பெயர் யாது?




2. இத்திண்மத்தின் விளிம்பு ஒன்றின் நீளம் யாது?

3. இத் திண்மத்தின் விளிம்புகள், உச்சிகள் எண்ணிக்கையைத் தருக.

(2 + 2 + 4+(1 + 1 + 2) புள்ளிகள்

**05)** மாணவன் ஒருவன் காலை 9 மணி முதல் காலை 10 மணி வரை வீதி ஒன்றில் சென்று வாகனங்களின் வகைகளைக் கணக்கெடுப்புச் செய்தான். ஒரு வாகனம் தன்னைக் கடக்கும் போது அந்த வாகன வகைக்கு எதிரே வரவுக்குறி மூலம் பின்வரும் அட்டவணையில் பதிவு செய்தான்.

| வாகன வகை | வாகனங்களின் (வரவுக்குறி மூலம்) | வாகனங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| கார் | 卌 卌 卌 卌 | ______ |
| வான் | 卌 卌 卌 | ______ |
| உந்துருளி | 卌 卌 卌 卌 卌 | ______ |
| ஈருருளி | 卌 卌 卌 卌 卌 卌 | ______ |

(2 புள்ளிகள்)

a. அட்டவணையில் எண்ணிக்கைக்குரிய நிரல் பகுதியினைப் பூர்த்தி செய்க.



kalvi.lk

b. இத்தரவுகளைக் காட்ட ◯ எனும் குறியீட்டைப் பயன்படுத்தி பட வரைபை வரைக.

◯ - என்பது 10 வாகனங்களைக் குறிக்கும்.

(4 புள்ளிகள்)

| வாகன வகை | படவரைபு |
| --- | --- |
| கார் | |
| வான் | |
| உந்துருளி | |
| ஈருருளி | |

c. அன்றைய தினம் மாணவன் கணக்கெடுப்புச் செய்த நேரத்தில்

1. பயணித்த மொத்த வாகனங்கள் எத்தனை?

2. அதிகளவு பயணித்த வாகன வகை யாது?

3. பயணம் செய்த கார்களின் எண்ணிக்கைக்கும் ஈருருளியின் எண்ணிக்கைக்கும் இடையிலான விகிதத்தை எளிய வடிவில் எழுதுக.

(2 x 3 புள்ளிகள்)



kalvi.lk

# GRADE 6-11

# STUDY WITH US..!

# ICT ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

### எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page